செய்தி வெளியீடு எண்: 289/2018 நாள் : 21.05.2018

**வேலூர் மாவட்டம் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் புங்கம்பட்டு நாடு ஊராட்சியில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் திறந்து வைத்தார்.**

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஆலங்காயம் ஒன்றியம் மலைகிராமமான புங்கம்பட்டு நாடு ஊராட்சியில் புதிய கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த விழாவிற்கு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் பேசியதாவது.

தமிழக மக்களின் நீங்காத இடம் பிடித்த மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தை முன்னோடி மாநிலமாக மாற்றிட பல்பேறு நடவடிக்கைகள் எடுத்தார். அதில் கல்வி மற்றும் சுகாதார துறையில் இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக திட்டத்தை செயல்படுத்தி காட்டியுள்ளார். சுகாதாரத்துறையில் தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் தரமான மருத்துவ வசதிகளை பெற்றிட அனைத்து வகையான மருத்துவ வசதிகளை தனியார் மருத்துவமனைக்கு இணையாக அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தி ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகிறார்கள் என்றால் அது மிகையாகது. கர்பிணிதாய்மார்களுக்கு தற்போது ரூ.18 ஆயிரம் நிதியுதவி அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளது. பிறக்கும் குழந்தைகளுக்கு அம்மா பெட்டகம், சத்தான மாத்திரைகள், அனைவருக்கும் மருத்துவ காப்பீட்டு வசதி போன்ற மருத்துவ துறையில் மக்கள் பயன்பெரும் வகையில் எண்ணற்ற நலத்திட்டங்களை பார்த்து பார்த்து செய்து கொடுத்தவர் மாண்புமிகு மறைந்த முன்னாள் முதல்வர் அம்மா அவர்கள். நான் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த போது தமிழகத்தில் மத்திய அரசிடமிருந்து 128 புதியஆரம்ப சுகாதார நிலையத்தை பெற்றோம். அதில் நமது வேலூர் மாவட்டத்திற்கு மட்டும் 28 புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை பெற்று கொடுத்தோம். மலை கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று புதூர் நாடு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கையறையுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்றப்பட்டது. தற்போது புங்கம்பட்டுநாடு கிராமத்தில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த சுகாதார நிலையம் தற்போது தற்காலிக கட்டிடத்தில் இயங்கும் விரைவில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அந்த கட்டிடத்தில் நிரந்திரமாக இயங்கும். இங்கு மருத்துவ பணியில் 2 மருத்துவர்கள், 3 செவிலியர்கள், 1 மருந்தாளர் மற்றும் 2 துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மலை கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று இந்த மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையின் வாயிலாக புங்கம்பட்டு நாடு ஊராட்சியில் உள்ள சுமார் 4500 க்கும் மேற்ப்பட்ட மலைகிராம மக்கள் பயன்படுத்தி கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதிகளை மலைகிராம மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். தொடர்ந்து அம்மாவின் அரசு மலைகிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அரசாக இருக்கும் என்று விழாவில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.நல்லத்தம்பி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெ.பெரியசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோவிசம்பத்குமார், திரு.கே.ஜி.ரமேஷ், துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.தேவபார்த்தசாரதி, மற்றும் மருத்தவர்கள் பொதுமக்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வேலூர்-9.